சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 85/2020

2024 ம் ஆண்டு **15.03.2024** ம் தேதி கலாமணி

என்பவரின் சாட்சியாகிய மசா 1 ன் வாக்குமூலம்

(1969 ம் ஆண்டில் 44–வது பிரிவின்படி) திருமதி.பி.மோகனவள்ளி, பி.ஏ., எம்.எல்., சார்பு நீதிபதி, பொள்ளாச்சி அவர்கள் முன்னிலையில், சார்பு நீதிமன்ற உதவியாளர் திரு.எம்.குமரலிங்கம் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கலாமணி | தாலூக்கா | கோயமுத்தூர் |
| க.பெ. (அ) த.பெ. | நடராஜ் | சமயம் | இந்து |
| கிராமம் | தேவநல்லூர் | வயது | 60 |

முதல் விசாரணை

நான் இவ்வழக்கின் மனுதாரர். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும். என் தரப்பு ஆவணங்களாக

1.மசாஆ 1 – 26.06.2016 தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை சான்று நகல்.

2.மசாஆ 2 – குற்ற இறுதி அறிக்கை சான்று நகல்.

3.மசாஆ 3 – TN 78V3933 வாகனத்தின் காப்பீடு ஆன்லைன் நகல்

4 மசாஆ 4 – TN 78V3933 வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை சான்று நகல்

5.மசாஆ 5 – எனது காயச்சான்று சான்று நகல்.

6.மசாஆ 6 – மருத்துவ பில்கள் (ரூ.56,801/–) அசல்

7.மசாஆ 7 – எனது டிஸ்சார்ஜ் சம்மரி அசல்

8.மசாஆ 8 – எனது ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது),

8.மசாஆ 8 – எனது வங்கி கணக்கு புத்தகம் நகல் (அசலுடன் ஒப்பிட்டுப்பார்க்கப்பட்டது),

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பொள்ளாச்சி உடுமலை ரோடை கடந்த போது விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். வாகனம் வருவதை கவனித்து ரோடை கடக்கும் போது நின்று சென்றிருந்தால் விபத்தை தவிர்த்திருக்காலாம் என்றால் சரியல்ல. நான் கவனித்து தான் வந்தேன். விபத்தினால் எனக்கு நிரந்தர ஊனனோ காயமோ ஏற்படவில்லை என்றால் சரியல்ல. மருத்துவர் பரிந்துரை இல்லாமல் மருந்து பில்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ஒவ்வொரு தலைப்பிலும் நான் கேட்டுள்ள இழப்பீடு மிகையானது என்றாலும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. 1ம் எதிர்மானுதாரர் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டி காப்பீடு விதிமுறைகளை மீறியுள்ளதால் 2ம் எதிர்மனுதரரால் எனக்கு நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய கடப்பாடு இல்லை என்றால் சரியல்ல. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் தான் பொருப்பினர் என்றாலும் அவர் தான் நஷ்ட் ஈடு தர வேண்டும் என்றால் சரியல்ல. நான் கேட்டுள்ள வட்டி விகிதாச்சாரம் என்றால் கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி